2. நடைமுறைக் கேள்வி.

போதுமான துணைக் கேள்விகள் போட அனுமதிக்காதது குறித்து.

திரு. நா. வீராசாமி: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், கேள்வி நேரம் என்பது ஒரு மணி நேரம் என்று பொதுவாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வசதியாக இருக்கும்பொருட்டு விதிமுறைகளிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்றையதினம் முக்கியமான கேள்விகள் வந்திருந்தும், முதல் கேள்வி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலளிக்கவேண்டிய கேள்வி, அதற்கே கூடத் துணைக் கேள்விகள் அதிகமாக அனுமதிக்கப்படவில்லை. நாங்கள் எல்லாம் கையைத் தூக்கிக்கொண்டே இருந்தோம். பிறகு வந்த கேள்வி கண்ணகி கோயிலைப்பற்றிய கேள்வியும் முக்கியமான கேள்வி, அதற்கும் போதுமான துணைக் கேள்விகள் அனுமதிக்கப் படவில்லை, இது முறைதானா? உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. நீங்கள் நினைத்தால் சப்ளிமெண்டரிகள் போடுவதற்கு அனுமதிக் கலாம். நாங்கள் எல்லாம் மிக ஆர்வத்தோடு கைகளைத் தூக்கியும் கூட அதற்கு வாய்ப்பு அளிக்காமல் இருப்பது முறைதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொல்வது சரியல்ல. முதல் கேள்வி எடுத்துக்கொள்ளப்பட்ட பொழுது நான் சுற்றும்முற்றும் பார்த்தேன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்த்தார்கள் என்று கருதுகிறேன். அது முதல் கேள்வியாக இருந்ததால் டேபிளிலே வைக்கப்பட்ட கேள்விகளை யாரும் படிக்க முடிய வில்லை, இரண்டாவது கேள்விக்கு நான் சென்றுவிட்ட பிறகு நீங்கள் கையைத் தூக்கியிருக்கலாம் என்று நினைக்கிறேன். கண்ணகி கோயில் குறித்து வந்த கேள்விக்கும் ஆறு துணைக் கேள்விகள் வரை அனுமதிக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் நமக்கு நிறைய பிஸினஸ் இருக்கின்றது என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.